முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 76 பிரசோற்பத்தி தை 28 (11-02-1992) செவ்வாய்

### நிதி, ஆயுத கட்டுப்பாடுகள் தொடரும்

## ஸ்ரீலங்காவிற்கான பிரி. உதவி கொள்கை மாற்றமில்லை

ஸ்ரீ லங்காவிற்கு 12 மேற்குலக நாடுகள் பாரிஸ் மாநாட்டில் நிதி உதவி வழங்கியமை ஸ்ரீ லங்கா தனக்கு கிடைத்த அரசியல் வெற்றியாகக் கூறிவருகின்ற போதிலும் பிரிட்டன் தனது முன்னைய கொள்கையில் மாற்றமில்லை என அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கா அரசிற்கான நிதியுதவி, இராணுவ ஆயுத உதவி என்பவற்றில் பிரிட்டன் தொடர்ந்தும் தனது கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் என அறிவித்துள்ளது

# முல்லைத்தீவு ராணுவ முகாம்

# கிழக்கு அரண்கள் தகர்ப்பு!

## அதிகாரி உட்பட 25 க்கும் மேற்பட்ட படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவு இராணுவ முகாமின் கடற்கரையோரப்பகுதி காவலரண்கள் விடுதலைப் புலிகளினால் நேற்று அதிகாலை தாக்கி அழிக்கப்பட்டன. இத்தாக்குதலில் 7 காவலரண்கள் முற்றாக அழிந்தன. இராணுவ அதிகாரி யொருவர் உட்பட 25 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமின் கடற்கரையோர காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதலை ஆரம்பித்தனர்.

சுமார் 15 நிமிடங்கள் நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து கடற்கரைப் பக்கமாக இருந்த 7 பிரதான காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன. இறந்தவர்களை விட பல படையினர் மிதிவெடிகளில் சிக்கி காலிழந்தனர்

தாக்குதல் நடைபெற்ற போது முகாமிலிருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீதும்புலிகள் தாக்குதல்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

முல்லைத்தீவுகாவலரண்கள் தகர்க்கப்பட்ட பின் அங்கிருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம்:

★ 50 கலிபர் துப்பாக்கி - 1
★ கலிபர் ரவைகள் - 1000
★ ஆர். பி. ஜி புறப்பலர் - 1
★ ஆர். பி ஜி ஷெல் - 4
★ மினி மினி எல் எம்.ஜி - 1
★ இதற்கானரவைகள் - 3000
★ ரி-56 துப்பாக்கிகள் - 18
★ ரி-56 மகஸீன்கள் - 32
★ ரவைகள் - 3000
★ எப். என் சி. துப்பாக்கி - 1
★ எப். என், சி மகஸீன் - 1
★ துப்பாக்கி ஷெல்கள் - 3
★ ஏ. கே. எல் எம் ஜி. ரவைக்கூடுகள் - 2

— 04 ஆம் பக்கம் பார்க்க

### கொழும்பில் இராணுவ அதிகாரிகள்

## தாக்குதல் கடுமையினாலேயே படையினர் பின்வாங்கினராம்!

முல்லைத்தீவு இராணுவ முகாமருகே நேற்று நடைபெற்ற தாக்குதலில் ஓர் இராணுவ அதிகாரியும் பலியானதாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

முகாமின் கிழக்குப் புறமாக தாக்குதல்கள் கடுமையாக இருந்தமையினால் அப்பகுதியின் 6 காவல் பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் பின்வாங்கியதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக அவ்வானொலி மேலும் தெரிவித்தது.

## மேலும் 3 எல்லைக் கிராமங்கள் சிங்கள மயமாக்கப்பட்டன

மட்டக்களப்பில் மேலும் 3 தமிழ் எல்லைக் கிராமங்கள் சிங்கள மயமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூன்று எல்லைக் கிராமங்களும் மூன்று வாரத்தில் சிங்களக் குடியேற்றங்களாக மாற்றப்பட்டுள்ளன.

கடந்த வருடத்திலும் இவ்வாறு மட்டக்களப்பு - பொலநறுவை எல்லையில் இருந்த 15 தமிழ் கிராமங்கள் சிங்கள மயமாக்கப்பட்டு பொலநறுவை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தீவில் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்

முல்லைத்தீவில் நேற்று பகல் கடும் விமானத் தாக்குதல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்தும் நேற்று தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடைபெற்ற வண்ணமிருந்தது.

## பாரிஸ் மாநாட்டு தூதுக்குழு நாடு திரும்பியது

பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச்சென்ற பிரதமர் தலைமையிலான தூதுக்குழுவினர் நாடு திரும்பினர்.

மேற்படி குழுக்கூட்டத்துக்கு தெற்காசிய பிராந்திய பணிப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உணவுப்பொருள்களுடன் குமண கப்பல் வந்தது

நேற்று வந்த 'குமண' கப்பலில் அரிசி, மா, சீனி, பாசிமா வகைகள், கடலைவகைகள். தேங்காய் எண்ணெய் முதலான பொருள்கள் மக்களுக்கு விநியோகம் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள தாக செயலக வட்டாரங்களிலிருந்து தெரிகிறது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் இருந்து மட்டும் சைக்கிள் கொண்டுவர அனுமதி

வவுனியாவிலிருந்து அனுமதி பெற்று புதிய சைக்கிள்கள் வடபகுதிக்கு வாங்கி வரலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கொழும்பிலிருந்து சைக்கிள்களை எவரும் கொண்டு வரக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## தீவுப்பகுதி மக்களில் சிலர் இன்று கப்பல் மூலம் செல்வர்

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்களில் 150 பேருக்கு மேற்பட்டவர்கள் இன்று 'லில்லி லில்லி' கப்பலில் அனுப்பிவைக்கப்படவுள்ளனர்

இக்கப்பல் தீவுப் பகுதியில் தங்கியுள்ள யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர்களை ஏற்றிக் கொண்டு இரண்டு தினங்களில் பருத்தித்துறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது 07

### வீரச்சாவு

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் அதிரடிப் படையினர் மீது நடத்தப்பட்ட வெற்றிகரத் தாக்குதலில் காயமடைந்த விஜி (மகிந்தகுமார்) நேற்று வீரச்சாவு எய்தினார்

## காஷ்மீரில் ஊரடங்குச்சட்டம் அமுலாகிறது

### ஊடுருவும் திட்டத்தில் புதியமாற்றம்

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி (J K L.F) இன்று பாகிஸ்தானிலிருந்து இந்தோ - பாக் எல்லையூடாக இந்திய கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் மாநிலத்தில் நுழைய திட்டமிட்டுள்ளது

#### ஊரடங்கு

இந்த எல்லை கடந்த ஊடுருவலைத்தடுக்க தலைநகர் ஸ்ரீநகரிலும் ஏனைய இடங்களிலும் இன்றுகாலை ஊரடங்குச் சட்டத்தை இந்திய இராணுவம் பிறப்பிக்கவுள்ளது

#### வரவேற்புசூடாக இருக்கும்

ஊரடங்குச் சட்டத்தை மீறி பாகிஸ்தானிலிருந்து எவரேனும் ஊடுருவமுயன்றால் வரவேற்பு 'சூடா'கவே இருக்கும் என அப்பகுதியிலுள்ள இந்திய பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதே வேளை எல்லை நெடுகிலும் கண்ணி வெடிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அந்திய எல்லை காவல்படை எச்சரித்துள்ளது.

#### கடந்தே தீருவோம்

எனினும் ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணி, என்ன நேர்ந்தாலும் இந்திய காஷ்மீரினுள் நுழைவோம் என சூளுரைத்துள்ளது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

★ 'தட்சணை' பெற்று தாட்சண்யமாம்

# மாணவரைச் சேர்க்க லஞ்சம்; விசாரணையில் 50 அதிபர்கள்!

லஞ்சம் வாங்கியதான குற்றச்சாட்டின் பேரில் ஐம்பது விசாரணை நடைபெறுவதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்காகப் பிரபல்யமான அதிபர்களால் லஞ்சம் பெறப்பட்டதாக லஞ்சத் திணைக்களத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டுள்ள அதிபர்களில் அறுபேர் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக பெற்றோர்களிடம் பத்தாயிரம் ரூபா முதல் பதினையாயிரம் ரூபா வரை லஞ்சம் வாங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் பாடசாலை அபிவிருத்தித் திட்டம் மூலம் பணம் பெற முயற்சித்ததாகவும் லஞ்சத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 'மன்னனி'டம் தயங்கும் (தியேட்டர்) அதிபர்கள்

பெரும் பொருள் செலவில் தயாரிக்கப்பட்ட 'மன்னன்' என்ற திரைப்படத்தை சென்னையில் திரையிட தியேட்டர்கள் கிடைப்பது மிகச்சிரமமாக உள்ளது என்று தமிழகத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

கர்நாடகக் கலவரங்களை யடுத்தே, ரஜனிகாந்த (கன்னடத்தவர்) கதாநாயகனாக நடித்துள்ள இப்படத்தைத் திரையிட தியேட்டர்காரர்கள் தயங்குகின்றனராம்.

சென்னையில் சாந்தி தியேட்டரில் மாத்திரம் இப்படம் திரையிடப்பட்டது கூட சிவாஜி பிலிம்ஸ் தயாரிப்பு என்பதனாற்தானாம். இத் தியேட்டர் சிவாஜி கணேஷனின் மகன் சாந்திக்கு உரிமையானது என்பது குறிப்பிடத்தக்கது.

## மலேரியாவினால் வருடாந்தம் உலகில் 30 லட்சம் பேர் மரணம்

மலேரியாக் காய்ச்சலினால் உலகில ஆண்டுதோறும் முப்பது இலட்சத்திற்கும் அதிகமானோர் உயிர் இழக்கின்றனர், இப்போது பயன்படுத்தப்பட்டு வரும் 'குனோரோகுவின்' என்னும் மருந்து மலேரியாக் கிருமிகளை முற்றாக அழிப்பதில்லை என்ற உண்மையை சமீபத்தில்தான் மருத்துவர்கள் கண்டறிந்தனர்.

அதன் விளைவாக அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் 'ஹாலிபான்' என்ற புதிய மருந்தைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த மருந்து எதிர்பார்த்ததிலும் பார்க்க கூடுதலான பலனைக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. (16)

## 'ராஜ கம்பீரமிக்க தலை கலைஞருக்கு'...

'பிறைச்சந்திரன் மாதிரி தலையில் ஒரு காலியிடம் காதோரத்தில பிடிச்சு வைச்ச மாதிரி ரெண்டு கைப்பிடி முடி... அவர் தலையின் அழகுக்கு ஒரு உலகத் தலைவராகவே போயிருக்கவேண்டியவர். அப்படியொரு ராஜகம்பீரமிக்க தலை கலைஞருக்கு'.

தமிழகத்தின் பிரபல வார இதழான 'ஆனந்தவிகடன்' சமீபத்தில் ஐந்து புள்ளிகளின் புகைப்படங்களை முன் பக்க அட்டையில் போட்டு 'யார் தலை அழகு?' என்று ஒரு ரசனையான வாக்கெடுப்பு நடத்தியபோது, குடும்பத் தலைவி ஒருத்தி கலைஞர் மு கருணாநிதியின் தலை பற்றியதன் ரசனையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்

கலைஞர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரம், 'துக்ளக்' ஆசிரியர் சோ, முன்னாள் சபாநாயகர் பி.எச்.பாண்டியன், டாக்டர் எம்.எஸ் உதயமூர்த்தி ஆகியோரின் தலையழகு பற்றியே இவ் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது

'சோ'வின் மொட்டைத் தலைக்கு 29 வாக்குகளும் கலைஞருக்கு 23 வாக்குகளும் கிடைத்தன. ஏனைய 3-ம் 4-ம் 5-ம் இடங்களை முறையே தேவாரம், பாண்டியன், உதயமூர்த்தி ஆகியோர் பெற்றனர். (16)

★ பேராசிரியர் எச்சரிக்கை

## யானைகளைப் படங்களிலேயே பார்க்கும் நிலை வரலாம்

19-ம் நூற்றாண்டு இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இலங்கையில் 20 ஆயிரம் யானைகள் அளவில் இருப்பதாக கூறப்பட்டது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் மூவாயிரம் அளவிலேயே யானைகள் இருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக 'டான் டான்போத்' என்ற பேராசிரியர் வெளியிட்ட அறிக்கையில், வருடம் ஒன்றிற்கு 20 க்குக் குறையாத யானைகள் காட்டை அண்டிய பகுதிகளில் கமம் செய்பவர்களால் கொல்லப்படுகின்றன, 5 முதல் 10 வரையில் யானையின் தந்தத்திற்காக வேட்டையாடுபவர்களினால் கொல்லப்படுகின்றன, நோய்வாய்ப்பட்டு இயற்கையாக மரணம் அடைபவை மிக மிகக் குறைவு.

இதனைத் தடுக்க அரசு உடனடியாகச் ஆவன செய்யாவிட்டால் படிப்படியாக அருகிக் குறைந்துவரும், உலகத்திலேயே அதி சிறந்தவை என்று கருதப்படும் இலங்கை யானைகளை இன்னும் சில வருடங்களில் பின் எமது சந்ததியினர் படங்களில்தான் பார்க்க முடியும் அவர் கூறியுள்ளார் (16)

## மரணத்தின் சின்னம்...

மதுவினால் ஏற்படக் கூடிய கேடுகளைப்பற்றித் தமிழக இதழ் ஒன்று வெளியிட்டுள்ள சிந்தனை மொழிகள் சில வருமாறு:-

- ☐ கள்ளைத் தொடாதே காலனைத் தேடாதே.
- ☐ மதுக்கிண்ணம் மரணத்தின் சின்னம்.
- ☐ கிண்ணத்தை ஏந்தாதே - இழிந்த எண்ணத்தில் நீந்தாதே.
- ☐ குடியினால் உடல் புண்ணாகும், குடும்ப மானம் மண்ணாகும்.
- ☐ மது வேட்பாளர் 'போதை' லஞ்சம் தந்து "மரண" வாக்குகள் கேட்கிறார். உஷார்...

## யாழ்நகரில் தகவல் தொடர்பு சேவை

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதி புகையிரத நிலைய சந்தியில் புதிய தனியார் தகவல் தொடர்பு நிறுவனம் ஒன்று தற்போது இயங்கி வருகின்றது. இந்த நிறுவனத்தின் மூலம் உள்நாட்டு மக்கள் கொழும்புக்கும் பிற நாடுகளுக்குமான அவசர செய்திப் பரிமாற்றத் தகவல்களை அறியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் இப் புதிய தனியார் நிறுவனத்தின் சேவை அவசியமான ஒரு பணி எனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

## 'உறுதி பூர்வ செயற்பாடு'

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ள உறுதி பூண்டுள்ளதெனவும் விளையாட்டுத்துறைக்கும் கூடிய கரிசனை காட்டப்படும் எனவும் மேற்படி நிலைய விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின்போது குறிப்பிட்டார்.

இந் நிலையத்தின் தலைவரான ஏ. கனகசபாபதியும், செயலாளரான சச்சி தவச்செல்வனும் புதிய செயற்திட்டத்தை விரைவுபடுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (16)

## ஒரே சமயத்தில் 10 பேர் போராட்டத்தில் இணைவு

கடந்த சனிக்கிழமை மாலை குருநகரில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பிரதிப் பொறுப்பாளர் கவிஞர் வாஞ்சிநாதனின் உரையைத் தொடர்ந்து அவர் முன்னிலையிலேயே பத்துப்பேர் தாம் ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு முன்வந்து தமது பெயர்களைப் பதிவு செய்தனர்.

இதைவிட மற்றும் சில இளைஞர்கள் தாமும் வர விரும்புவதாகக் கூறினர். அண்மைக் காலத்தில் அரசு போர் ஆயத்தங்களைச் செய்து வருவதன் எதிரொலியாக இது அமைந்துள்ளது.

## இந்தியாவில் உள்விவகாரங்கள் பூதாகாரமாகின்றன மாஜி இராணுவத் தளபதி சுந்தர்ஜி சாடல்

# மத்தியில் அதிகாரங்கள் குவிந்துள்ளதும் காரணம்

"சமஷ்டி என்ற பெயரில் உள்ள ஆட்சிமுறையில் மத்தியில் ஏகப்பட்ட அதிகாரங்கள் குவிந்துகிடக்கின்றன. இது இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கான முதலாவது காரணமாகும்".

இவ்வாறு முன்னாள் இந்திய பிரதம தளபதி ஜெனரல் சுந்தர்ஜி சமீபத்தில் அளித்த பேட்டியொன்றில் கூறியிருக்கிறார்.

மாநிலங்களில் கிளர்ச்சிகள் வித்திட அங்கு வளர்ச்சி விகிதாசாரம் மிகக்குறைவாக இருப்பது உள்நாட்டுப்பிரச்சினை பெருக இரண்டாவது காரணம் என்றும் தமிழகத் தலைவரான ஜெனரல் சுந்தர்ஜி மேலும் கூறியுள்ளார்.

## ஈ.வெ.ராவுக்கு 'பெரியார்' பட்டம் கிடைத்தது எப்படி?

திராவிட இயக்கத்தின் தந்தை என்றும் பகுத்தறிவுச் சிங்கம் என்றும் போற்றப்படுகின்ற ஈ வெ ராவுக்கு 'பெரியார்' என்ற பட்டம் எவ்வாறு கிடைத்தது? இதனைத் தமிழக இதழ் ஒன்று சமீபத்தில் 89 வயது மூதாட்டி ஒருவரை ஆதாரம் காட்டித் தெரிவித்துள்ளது.

"1938 ஆம் வருஷம்னு நினைக்கிறேன் தமிழ் நாட்டுப் பெண்களுக்காக நாங்களெல்லாம் ஒரு அமைப்பு நடத்திக்கிட்டு இருந்தோம். அப்போது 'நாராயணிம்மா' என்று ஒருத்தர் குயின்மேரிஸ் கல்லூரியில் புரொபசரா இருந்தாங்க. அவங்க என்னிடம் 'இந்த மெட்ராஸ் மாகாணத்தில் உள்ள முக்கியமான பிரமுகர்களெல்லாரும் ஒவ்வொரு பட்டம் பெயரோட இருக்காங்க... ஆனா... ஈ வெ.ராவுக்கு மாத்திரம் எந்தப்பட்டமும் இல்லை. அவருக்கு ஏதாவது ஒரு பட்டம் நம்ம அஸோஸியேஷன் மூலமா கொடுக்கணும்னு சொன்னாங்க. எல்லாருக்கும் வழிகாட்டியான அவருக்கு 'பெரியார்' என்ற பட்டம் கொடுச்சிடிச்சு".

மேற்கண்டவாறு தன்னுடைய 89 வயதில் பார்வை இழந்த நிலையில் மீனாம்பாள் சிவராஜ் என்ற மூதாட்டி சொன்னார்.

## நீர்வேலியிலும் நடவடிக்கை

நீர்வேலி பிரதேச சபையினர் கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

விசர்நாய்ப் பெருக்கத்தைத் தடுக்கு முகமாக நாய் பிடிப்பதற்கான புதிய வண்டி தயாரிக்கப்பட்டு வருவதாக கோப்பாய் பிரதேசசபை அலுவலக உத்தியோகத்தர் கோப்பாய் வெள்ளைப்பிள்ளையார் சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற சுகாதாரக் குழு கருத்தரங்கில் தெரிவித்தார்


### சிறு விளம்பரம்

கமரா தேவை

நல்ல நிலையில் உள்ள YASICA கமரா தேவை. Fx-3, Fx-7, மொடல்கள் விரும்பத்தக்கன. விலை, மொடல் என்பன குறிப்பிட்டு கடித மூலம் தொடர்பு கொள்க. விளம்பர இல: 305 மே/பா முரசொலி, கல்வியங்காடு.

02015

### CONDOLENCES

The students and staff of the Ramanathan College TACEP express their profound sorrow on the death of ANNAPOORNAM beloved wife of Mr N Theve palasingham, Regional Co-ordinator, Jaffna, TACEP.

02014

அமைச்சர் 'ரணில்' கூறியதாகத் தகவல்

# 'வடக்கில் உடனடியாக இராணுவ நடவடிக்கை இல்லை'

''வடபகுதிமீது உடனடி இராணுவ நடவடிக்கை இல்லை'' என்று அமைச்சரவைப் பேச்சாளரும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தாராம்.

இது பற்றிய செய்தி ஒன்றினை கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்று வெளியிட்டுள்ளது.

''யாழ் மாவட்டத்தில் விடுதலை புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை விடுவிக்கப் பாதுகாப்புப் படையினர் உடனடியாக நடவடிக்கையில் ஈடுபடமாட்டார்கள் என்று பாராளுமன்றத்தில் தம்மைச் சந்தித்த வடபகுதி எம். பிக்களிடம் தெரிவித்துள்ளார்'' என்று இச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் சிக்கிய கொள்ளைக்காரி

நாடெங்கும் பரவலாக நிகழ்ந்த கொள்ளைகள் தொடர்பாகப் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த பெண்ணொருத்தி வவுனியாவில் சிக்கினார் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

46 வயதான இப்பெண்ணின் பெயர் ரம்யா என்று தெரிவிக்கப்படுகின்றது.

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்க்கு மிகுதிக் கொடுப்பனவு கிடைக்கும்

வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபன நிரந்தர ஊழியர்களுக்கு 1990-ம் ஆண்டு முதல் ஆறு மாதங்களுக்குரிய போனசும், மிகுதிச்சம்பளமும் வழங்கப்படவுள்ளது.

இன்றும், நாளையும் முறையே பிராந்தியகாரியாலயம் பளை, உப அலுவலகம் முரசுமோட்டை ஆகியவற்றில் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இவற்றைப் பெறவரும் போது முன்பு குறிப்பிட்ட பிரகாரம் வங்கிப் புத்தகங்களையும் கொண்டு வருதல் வேண்டும் எனவும் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## தீவக ஓய்வூதிய வவுச்சர்

இலங்கை வங்கிக் கிளையூடாகத் தமது ஓய்வூதியத்தைப்பெறும், தீவுப் பகுதிகளைச் சேர்ந்த ஓய்வூதியர்களின் தை மாதத்திற்கு உரிய வவுச்சர்கள், ஸ்ரான்லி வீதியில் உள்ள இலங்கை வங்கிக் கிளையில் இயங்கும் ஊர்காவற்துறை இலங்கை வங்கிக்கு வந்து சேர்ந்துள்ளன.

மேற்குறிப்பிட்ட வவுச்சர்களை உடனடியாகக் காரியாலயத்தில் வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளும்படி வங்கி முகாமையாளர் திரு. பீ ஏ அருமைநாயகம் கோரியுள்ளார். (16)

## 150 பட்டதாரிகளுக்கு நியமனம் என அறிவிப்பு

வடக்கு, கிழக்கு நிர்வாகப் பகுதிகளுக்கு உடனடியாக 150 பேர் நியமனமாவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொதுநிர்வாகத் துறையில் முகாமைத்துவப் பயிற்சியை முடித்துக்கொண்ட 150 பட்டதாரிகள் மேற்படிப் பகுதிகளில் ஏற்படும் சிவில் நிர்வாக வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படவுள்ளதாகக் கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

## சிவராத்திரியை முன்னிட்டு போட்டிகள் நிகழ ஏற்பாடு

உரும்பிராய் ஞானவைரவர் சுவாமி கோவில் தொண்டர் சபையினர் இம்முறையும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டுப் பல போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

உரும்பிராய் பகுதி மாணவர்களிடையே தேவாரமனனப்போட்டி, பேச்சுப்போட்டி, எழுத்துப்பரீட்சைப் போட்டி, பண்ணிசைப் போட்டி ஆகியவற்றை நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (35)

## 'அந்த ஆணையை மீற முடியுமா?..'

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை அவரது ஆட்சி அமைச்சர்களும், எம்.எல்லேக்களும் அளவுக்கு மீறிப் புகழ்வதைத் தமிழக வார இதழ் ஒன்று கேலிச்சித்திரம் மூலம் கிண்டல் செய்துள்ளது.

மேடையில் பேசும் பிரமுகர் ஒருவர் 'தன்னைப் பாராட்டுவதில் நேரத்தைச் செலவிட வேண்டாமென்று எங்கள் அருமைத் தலைவி சொல்லியிருக்கிறார். அகிலத்தையே ஆளும் அன்னைக்கு இணையான எங்கள் தலைவியின் அடக்க உணர்வு யாருக்கு வரும்? பொறுமைக்கு அவர் ஒரு பூமாதேவி 'பாராட்ட வேண்டாம்' என்று அந்த தெய்வமே சொன்ன பிறகு அந்த ஆணையை மீற முடியுமா?...' எனபபேசுவதாக இக் கேலிச் சித்திரம் உள்ளது.

## ஒருபடி மேலே செல்லும் வாழப்பாடி கோஷ்டி

முதல்வர் ஜெயலலிதாவை இந்திரா காங்கிரஸ் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான ஜி.கே. மூப்பனாரின் ஆதரவாளர்கள 'தாயே' என்கிறார்கள். தமிழக இ காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியின் ஆதரவாளர்களோ ஒருபடி மேலே சென்று 'லோகநாயகியே' என்கிறார்கள்'

இவ்வாறு நெல்லையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் திமுக முன்னாள் அமைச்சர் துரைமுருகன் கூறினார் துதிபாடும் இக்கூட்டத்திற்கு 'சோற்றில் உப்புக் கலந்து உண்டால் தான் சொரணை வரும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## எழுத்தே ஜீவனம், உணர்வுக்கு தீவனம்- கவிஞர் வைரமுத்து

''என் எழுத்தால் ஏதாவது ஓர் இதயத்திலாவது ஈரம் கசிந்தால் அதுவே எனக்குக் கிடைக்கக் கூடிய நோபல் பரிசு தான்'' இவ்வாறு மதுரையில் தமிழக வார இதழ் ஒன்றிற்கு அளித்த பேட்டியொன்றில் கூறியிருக்கிறார் பிரபல்ய கவிஞர் வைரமுத்து. 'நோபல் பரிசு பெறுவது எனது லட்சியம் என்று ஒருமுறை கூறியிருந்தீர்கள், இதற்கு இன்று நீங்கள் எத்தவகையில் முயற்சி செய்து வருகிறீர்கள்? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் ''நோபல் பரிசு என்பது முயற்சியால் கிட்டுவதன்று... படைப்புகளால் கிட்டுவது நான் எழுதிக்கொண்டே இருக்கிறேன். எழுத்தே என் ஜீவனமாகவும், என் உணர்வுக்குத் தீவனமாகவும் இருக்கிறது. இந்த பூமி உருண்டையில் எரிந்து கொண்டிருக்கும் எல்லாப் பிரச்சினைக்கும் காரணம் மனித நேயக்குறைவுதான். இதயத்தைக் கழற்றி வைத்துவிட்டு அந்த இடத்தில் மனிதன் கம்பியூட்டர்களைப் பொருத்திக் கொள்ள ஆரம்பித்து விட்டான். இருக்கும் மனித நேயத்தை வளர்க்கவும், இல்லாத மனித நேயத்தை விதைக்கவுமான பணியை என் எழுத்து செய்துகொண்டே இருக்கும், என் எழுத்தில் ஏதாவது ஓர் இதயத்திலாவது ஈரம் கசிந்தால் அதுவே நோபல் பரிசுதான்'' என்றும் சொன்னார்.

## இவர்கள் நிலையும் தொடர் மர்மம்

அம்பாறையிலிருந்து கொழும்புக்கு பஸ்ஸில் பயணம் செய்த கந்தசாமி சிவசிதம்பரநாதன், அவர் மனைவி புஷ்பராணி, இரு பிள்ளைகள் ஆகியோர் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வலத்தப்பிட்டி தடைமுகாமினரால் பொலிஸ் தடைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டனர்

பின்னர் இன்றுவரை இவர்களை பற்றிய விவரம் தெரியவில்லையெனக் கூறும் சர்வதேச மனித உரிமை அறிக்கை, மேற்படி நபர்களை விடுவிக்கக்கோரி அரசுக்கு மனுப் பண்ணுமாறு பொதுஸ்தாபனங்களையும், மக்களையும் கோரியுள்ளது.

## கடலுக்குள் ஒரு நகரம் அத்துடன் புராதன கப்பல்

''மூன்றாம் நூற்றாண்டு விஷயங்களுக்காக கடலுக்குள் ஆராய்ச்சி செய்யப்போன எங்களை வரவேற்க பதினெட்டாம் நூற்றாண்டுக் கப்பல் ஒன்று கடலுக்கடியில். காத்திருந்தது''

'வருடந்தோறும் சித்திரை மாதத்தில் வானவர் தலைவன் இந்திரனுக்கு நடத்தியாக வேண்டிய இந்திர விழாவை நடத்தாமல் அசட்டையாக இருந்ததால் இயற்கை வெகுண்டது .. பூம்புகாரைக் கடல் விழுங்கியது' என்று ஒரு தகவலைத் தமிழிலக்கியமான மணிமேகலை சொல்ல, 'கடலுக்குள் மூழ்கியது பாதி நகரம்தான்... மீதி நகரம் பூமிக்குள் புதையுண்டது' என்று சில குறிப்புகள் சொல்லின.

புதையுண்டதாகச் சொல்லப்படும் தகவல்கள் உண்மைதான் என்று இன்றைய பூம்புகாரின் நிலப்பகுதியில் அவ்வப்போது கிடைத்த பல கட்டடங்களின் சிதைவுகள் நிருபித்தன. அவை தவிர, கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் பூம்புகார் மீனவர்களின் வலைகளில் பல சந்தர்ப்பங்களில் அகப்பட்ட சிறிய சிலைகளும் பொருட்களும் நகரம் புதைந்திருக்கலாம் என்ற தியரியை உறுதி செய்தன.

இந்தச் சூழலில், கடலுக்குள் மூழ்கிச் சில தடயங்களைத் தேடுவதன் மூலம் சரித்திரத்துக்குள் மூழ்க, முயற்சிகளை மேற்கொண்டது தமிழக அரசு.

தமிழக அரசின் தொல்பொருள் துறையோடு, தேசியக் கடலாய்வு நிறுவனமும் சேர்ந்து கொண்டு களத்தில் ஸாரி, கடலில் இறங்கின. தேசியக் கடலாய்வு நிறுவனத்தின் தலைவர் எஸ். ஆர். ராவ் ஏற்கெனவே கண்ணன் வாழ்ந்த புராண நகரமான துவாரகையைக் கண்டுபிடித்துப் பரபரப்பை ஏற்படுத்தியவர். அவருடன் நேரடியாகக் கடலாய்வு நடந்த இடத்துக்குப் போய் ஒரு மாதம் தொடர்ந்து ஆய்வு நடத்தி விட்டு வந்தவர் தமிழகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் தலைவர் டாக்டர் நடனகாசிநாதன். அவர் சொன்னார்;

நடந்து முடிந்திருக்கும் இந்த கடல் ஆராய்ச்சி, தமிழகத் தொல் பொருள் ஆராய்ச்சி வரலாற்றில் ஒரு பெரிய சாதனை என்று சொல்லலாம்.

இலக்கியங்களில் சொல்லப்பட்டவை எல்லாம் வெறும் கற்பனைகள் என்றும், மிகைப்படுத்தியும் இட்டுக்கட்டியும். சொல்லப்பட்டவை என்றும் இனி யாரும் பொதுவாகப் பேசி விட முடியாது என்பதை இந்த ஆராய்ச்சி நிரூபித்திருக்கிறது. வங்காள விரிகுடா கடலில் பூம்புகாருக்கு அருகில் கடலுக்கு அடியில் ஒரு நகரம் மூழ்கியிருப்பதற்கான தடயங்கள் நிறைய கிடைத்திருக்கின்றன.

இன்றைய பூம்புகாருக்கும், நெய்தவாசலுக்கும் இடையில் கடலின் எண்பது அடி ஆழத்தில் மிகப் பெரிய கட்டடப் பகுதி ஒன்று இருப்பதை கூடக் கண்டுபிடித்தோம், இருபது அடி நீளமும் ஐந்து மீட்டர் உயரமும் உடைய சுவர்களோடு, அந்தக் கட்டடம் பவழத்தில் இருக்கிறது. அது ஒரு கோயிலாக இருந்திருக்கலாம்! இன்னொரு சுவாரஸ்யமான விஷயம்... காவிரி இன்று கடலில் கலக்கும் இடத்திலிருந்து வடக்கில் ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் தான் பழங்காலப்புகார் கடலில் கலந்திருக்கிறது என்பதையும் கண்டுபிடித்தோம் கடலுக்கு அடியில் தென்பட்ட படகுத்துறை ஒன்றின் மிச்சங்கள்தான் இந்தத் தகவல்களை நமக்குத் தந்தன.

மூன்றாம் நூற்றாண்டு விஷயங்களுக்காக கடலுக்குள் ஆராய்ச்சி செய்யப்போன எங்களை வரவேற்க, பதினெட்டாம் நூற்றாண்டுக் கப்பல் ஒன்று கடலுக்கடியில் காத்திருந்தது இன்னொரு ஆச்சரியம்!

இரண்டு பெரிய இரும்பு வளையங்கள் ஒரு பீரங்கி, இவற்றோடு கடலில் புதைந்த அந்தக் கப்பலின் சில ஈயக் கட்டிகள் கிடைத்தன. அவற்றின் ஒருபுறத்தில் ''W.Blackett' என்று எழுதியிருக்க... இன்னொரு புறத்தில் '1792' என்று வருடத்தைப்பதித்துவைத்திருக்கிறார்கள். அது எந்தநாட்டுக்கப்பல் ஏன் இப்படிக் கடலில் மூழ்கியது என்பதெல்லாம் இதுவரை தெரியவில்லை, பல நாடுகளுக்கும் தகவல்கள் சொல்லியிருக்கிறோம். பதில் விரைவில் கிடைத்துவிடும்,

இந்த ஆய்வை நாங்கள் ஒரு மாதம் நடத்தினோம். இதற்கு ஆன செலவு பத்து லட்ச ரூபாய். கடலில் மூழ்குவதில் வித்தகர்களான ஆறு பேருடன். அதிநவீன விஞ்ஞானிகளும் எங்களுக்கு இந்த ஆராய்ச்சியில் உதவினர். வருங்காலத்தில் வெளிச்சத்துக்கு வரவிருக்கும் பல சரித்திர உண்மைகளுக்கு இந்தக் கடல் ஆராய்ச்சி ஒரு நல்ல ஆரம்பமாக அமைந்திருந்ததாகத்தான் நான் நினைக்கின்றேன்'' என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்த நடனகாசிநாதன் முத்தாய்ப்பாக இப்படிச் சொன்னார்.

''சரித்திரம் என்பது வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட ஒரு விஷயமில்லை. மனித சமுதாயத்தின் முன்னேற்றம் வளர்ச்சி இவற்றைத் தனக்குள் சேதுக்கி வைத்திருக்கிறது சரித்திரம்.

''தலைமுறைகள் பலவற்றைத் தாண்டியும் நமது உணர்வுகளைப் புதுப்பிக்கும் சக்திமிகுந்த நமது பழந்தமிழ் நாட்டின் பெருமை வெறும் கற்பனையில்லை. அது நிரந்தரமான நிஜம் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டு[illegible] இன்றைய நமது நிலையிலிருந்து மேன்மையடைய [illegible]ண்டுபிடிப்பு நமக்கு உதவட்டுமே...!''

ந[illegible]டன்

இடம்பெயர்ந்தோர் தங்கிய பாடசாலை

# அதிபரினால் மூடப்பட்டது பணிப்பாளர் உடன் நடவடிக்கை

சுன்னாகத்தில் கல்லூரி ஒன்றில் தற்காலிகமாக இயங்கிவந்த இடம்பெயர்ந்த பாடசாலையை அக்கல்லூரி அதிபர் இயங்கவிடாது தடுத்துள்ளதால் அது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்களத்துக்கு முறையிடப்பட்டுள்ளது.

சாதாரண பூக்கன்று ஒன்றை அதிபர் பிள்ளை ஒன்று பிடுங்கியதே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து உடனடியாக விசாரணை நடத்த கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

பஞ்சாப் தேர்தல் களம்

# ஜனதாதள் கம்யூனிஸ்ட் இணைந்து போட்டி

பஞ்சாப் பொதுத் தேர்தலில் 4 லோகசபா தொகுதிகளிலும் 10 சட்டசபைத் தொகுதிகளிலும் ஜனதாதள் கட்சியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து போட்டியிடுவதற்கு உடன்பட்டுள்ளன.

பஞ்சாப் மாநிலத்தில் மேற்கொள்ளப்படப் போகும் திட்டங்கள் குறித்து மத்திய அரசு அறிவிக்காததையிட்டும், தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அகாலிதளக் கட்சிகள் தெரிவித்ததையும் அவர்களின் கூட்டறிக்கை கண்டித்துள்ளது.

# மதத்தை அரசியலுடன் கலக்கவேண்டாம்

மதக்கோட்பாடுகளை அரசியலுடன் கலப்பதால் பஞ்சாபில் தீவிரவாதம் வளர்வதற்கு உதவுகிறது சி பி ஐ எம். கட்சி தெரிவித்துள்ளது. பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசுக்கு ஆதரவு அளிப்பதாகத் தெரிவித்துள்ள அக் கட்சியின் அறிக்கையில் பஞ்சாப், ஹரியானா மாநிலங்களுக்கு இடையேயான எல்லைப் பிரச்சினை விவகாரங்களைத் தீர்க்க ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்றும், நதி நீர்ப் பிரச்சினையை உயர் நீதிமன்ற விசாரணைக்கு விடப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

# பாரதீய ஜனதா வேண்டுகோள்

பஞ்சாப் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டாமென பாதல் மான் மன்சிங் ஆகியோரைத் தலைமையாகக் கொண்ட அகாலிதள் குழுவினருக்கு பாரதிய ஜனதா கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப்பிரிவினர் கடந்த ஆண்டுத்தேர்தலில் பங்கேற்கமுடிவு செய்தனர் என்றும் தற்போது அதனைப்பகிஷ்கரிப்பது வியப்பாக இருக்கிறதாகத் தெரிவித்த பி, ஜே பி யின் துணைத் தலைவர் கே. என். சர்மா தேர்தலைப் புறக்கணிப்பதற்கான நியாயமான காரணங்கள் எதனையும்இவர்கள் வெளியிடவில்லை எனக் குறிப்பிட்டார்

காஷ்மீரில்......

### திட்டத்தில் மாற்றம்

எனினும் முன்னர் திட்டமிட்டிருந்தவாறு அல்ல புதிய திட்டத்திற்கமையவே நாம் எல்லையைக் கடப்போம் என ஜே. கே. எல். எப், அறிவித்துள்ளது

இம்முன்னணியின் ஆரம்ப ஸ்தாபகர் ஒருவரின் நினைவு தினத்தை இந்திய காஷ்மீரில் கொண்டாடவேஇந்த எல்லை ஊடுருவல் நடப்பதாக தெரிவிக்கப்படுகிறது

எனினும் பி.ஜே பி. கட்சி இந்திய சுதந்திர தினத்தில் காஷ்மீரில் இந்திய தேசியக் கொடியை ஏற்றியதற்கு பதிலடியாகவே ஜம்முகாஷ்மீர் விடுதலை முன்னணி இந்நடவடிக்கையை எடுப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்

### பேரணியில் இணைவு

இதனிடையே காஷ்மீர் நோக்கி புறப்பட்டுவந்து கொண்டிருக்கும் பேரணியில் பாகிஸ்தானில் பல பாகங்களிலிருந்தும் பொதுமக்கள் வந்து இணைவதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில்..

நேற்று முன்தினம் பலர் அனுமதி பெற்று சைக்கிள்களை வவுனியாவில் இருந்து கொள்வனவு செய்துகொண்டு வந்ததைக் காணமுடிந்தது. (13)

முல்லைத்தீவு...

நடத்தி அவர்களை விரட்டியடித்தனர்.

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்தும் மணலாறு முகாமிலிருந்தும் படையினர் கடும் ஷெல் தாக்குதல் நடத்திய போதிலும் புலிகள் இந்த ஷெல் தாக்குதலிடையே வெற்றிகரமாகத் தமது தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை முல்லைத்தீவு முகாம் மீது நேற்று புலிகள் நடத்திய தாக்குதல் முகாம் மீதான புலிகளின் படிப்படியான அதிரடித் தாக்குதலாக இருக்கலாம் என பீ. பி. ஸி குறிப்பிட்டது


## பொது அறிவு நூல்

(நடப்பாண்டு, உள்ளூர், உலக விவகாரங்களுடன் கூடியது)

★ எழுதுவினைஞர் / கிராமசேவையாளர் / ஆரம்பப் பள்ளி ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்குரியது.

★ பயனுள்ள வழிகாட்டி.

தொகுப்பு: த. ந. பஞ்சாட்சரம்.

New Science Academy யிலும்

சகல முன்னணிப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். 02017


★ மீன்பிடித்துறை அமைச்சர் சொல்கிறார்

# வடக்கு கிழக்கு போரினாலேயே தெற்கில் மீன்விலை அதிகரித்தது

கொழும்பில் மீன் விலை திடீரென அதிகரித்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு திடீர் விலை ஏற்றத்திற்குக்காரணம் வடக்குக் கிழக்குப் போர்தான் என நேற்று கருத்துத்தெரிவித்துள்ளார் மீன்பிடித்துறையமைச்சர் ஜோசப்மைக்கல் பெரேரா

வடக்கு கிழக்கு போரினால் மீன்பிடி வள்ளங்கள் சேதமடைந்தமையும், கடல் கண்காணிப்பு அதிகரித்துள்ளமையுமே அப்பகுதியிலிருந்து தென்பகுதிக்கு மீன் வருவது தடைப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் மீன்பிடி சேவையில் 45 சதவீதத்தை வடக்கு கிழக்கு மாகாணங்களே பூர்த்தி செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

### நிவாரண முத்திரை

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வறுமை நிவாரண உணவு முத்திரை பெறுபவர்களுக்குபுதிய உணவு முத்திரைகள் அடுத்த வாரத்தில் இருந்து வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஆனால் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய உணவு முத்திரைகள் தற்போது வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. 47

### விமான சேவை ஒப்பந்தம்

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கு மிடையிலான விமானப் போக்குவரத்துச் சேவை ஒப்பந்தம் ஒன்று அண்மையில் கைச்சாத்தாகியுள்ளது.

இதன்மூலம் சிட்னி எல்போர்ன் நகரங்களுக்கு வாரத்துக்கு இரு தடவைகளில் விமான சேவை கிரமமாக நடைபெறும் என அறிக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க இதுபற்றி தகவல் தருகையில் 20 மாதத்துக்கு முன்னர் இவ்விமான சேவை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் 30 ஆயிரம் இலங்கையர் வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தொற்று நீக்கி மருந்து கப்பலில் வந்தது

யாழ் மாநகர சபைக்குரிய தொற்று நீக்கி மருந்து வகைகளும், உபகரணங்களும் நேற்று குமண கப்பலில் வந்துள்ளன.

இவற்றால் மாநகரப் பகுதியில் தொற்று நோய் பரவுவதைத்தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 25

கைப்பற்றப்பட்ட...

- ★ இதன் லிக் -128
- ★ வெளிச்ச குண்டுகள்
- ★ தொலை தொடர்பு சாதனம்
- ★ தொலை காட்டி
- ★ இரவு பார்வை சாதனம் தொலை பேசி

பாரிஸ்...

பாளர் போல் ஹிம்மல் தலைமை தாங்கினார். அவுஸ்திரேலியா, கனடா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான், நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் சமூகம் கொடுத்திருந்ததாகப் பிரதமர் தெரிவித்தார்.

ஜனசக்தித் திட்டம் பற்றி ஆசிய அபிவிருத்தி வங்கியும், ஜப்பானும் அக்கறை காட்டின என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழக அனுமதி

# தகுதிபெற்ற மாணவர் புள்ளிகள் கல்வித் திணைக்களம் வந்தது

அண்மையில் வெளியான க பொ. த. உயர்தரப் பரீட்சையின் படி பல்கலைக் கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்ற பரீ. சார்த்திகளின் இதுவரை புள்ளிகள் வெளியிடப்படாத தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் மேற்படி புள்ளிகளை யாழ் கல்வித் திணைக்களத்தில் இன்றுமுதல் பார்வையிடலாம் எனக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்கப் பாடசாலை மூலம் நாடகமும், அரங்கியலும், நடனம், கர்நாடக சங்கீதம், மனைப் பொருளியல் போன்ற பாடங்களுக்குத் தோற்றிய நூற்றுக்கும் மேற்பட்டபரீட்சார்த்திகளின் மேற்படி பாடங்களின் முடிவுகளோ, புள்ளிகளோ வெளியிடப்படாதுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (20)

# அச்சுவேலி தபாலகத்தில் அடையாள அட்டைகள்

அச்சுவேலி தபால் கந்தோரில் நூற்றுக்கும் மேற்பட்ட அஞ்சல் அடையாள அட்டைகள் காத்துக் கிடக்கின்றன.

இத் தபாற் கந்தோருக்கு ஊடாக அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்திருந்த மாணவர்களினதும் பொதுமக்களினதும் அடையாள அட்டைகளே இங்கு வந்து பல மாதங்களாக தேங்கிக் கிடக்கின்றது.

இவற்றை உரியவர்கள் 10 நாள்களுக்குள் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் தவறின் இவற்றை திருப்பி அனுப்ப வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அச்சுவேலி தபாலதிபர் தெரிவிக்கின்றார். 43

பாகிஸ்தான் அறிவிப்பு

# எல்லையைத் தாண்ட அனுமதிக்க மாட்டோம்

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியினர் காஷ்மீர் எல்லைக் கோட்டைத் தாண்டி இந்தியாவினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று பாகிஸ்தான் அறிவித்திருப்பதாக இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

நேற்று புதுடில்லியில் கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இத் தகவலை வெளியிட்ட பிரதமர், இப்பிரச்சினையில் அனைத்து இந்திய மக்களும் ஒன்றிணைந்துள்ளனர் என்பதை பாகிஸ்தானுக்கும். சர்வதேச சமுதாயத்துக்கும் எடுத்துவிளக்க வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளையில் 280 மைல் நீளமான இந்த எல்லைப் பிரதேசத்தில் படையினர் உஷார் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆகாயம் பிராந்தியத்தில் விமான ரோந்தும் நடைபெறுவதாகவும், படைத் தளபதிகள் அவ்வப்போது நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இதனிடையே எல்லையைக் கடக்க முயன்ற இருவர் பாதுகாப்புப் படையினர் சூட்டில் ஒருவர் காயமடைந்து கைது செய்யப்பட்டதாக பிந்திய செய்தி ஒன்று தெரிவித்தது.

ரஷ்ய குடியரசுகளுக்கு

# உணவும் மருந்தும் அனுப்பப்படுகின்றன

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்தபுதியபொதுநலவாயநாடுகளுக்கு மேற்குலக நாடுகளிடமிருந்து உணவும் மருந்து வகைகளும் அவசர உதவியாக அனுப்பி வைக்கப்படுகின்றன

அமெரிக்காவும், ஐரோப்பிய சமூகமும் சேர்ந்து 75 பில்லியன் டொலர் பெறுமதியான இப்பொருள்களை ஜேர்மனியிலிருந்தும், துருக்கியிலிருந்தும் அனுப்பிவைக்கத் தொடங்கியுள்ளன.

இதைவிட தனிப்பட்ட உதவியாக ஜேர்மனியும், ஜப்பானும் உதவிப் பொருள்களை அனுப்புகின்றன

ரஷ்யக் குடியரசுகளுக்கு இவற்றை அனுப்புவதில் மேற்குலக நாடுகள் அரசியல் உள்நோக்கத்தைக் கொண்டுள்ளன என்று பி பி ஸி நிருபர் கருத்து வெளியிட்டுள்ளார்

உணவுப்...

700மெற்றிக் தொன் அரிசி அதேயளவு மா, 100 மெற்றிக் தொன் சீனி, 100மெ தொ. பால்மாவகைகள், 100 மெ. தொ. கடலைவகைகள் இவற்றுள் அடங்கும்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு மருந்து வகைகளும், எரிபொருள் வகைகளும், வர்த்தகவங்கிக்கு எரிபொருள் வகைகளும், தனியார் நிறுவனங்களுக்குரிய பொருள்களும் இக்கப்பலில் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (25 - 47)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தின[illegible]ல்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'இல் [illegible]ன்ன அச்ச[illegible]·1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது